மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

2—

கட்டட வசதி

***717—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை கருவூல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சார்நிலை கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, முன்நுழைவு அனுமதி பெறப்பட்டுள்ளது. போதிய நிதி ஒதுக்கீடு பெற்று கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது முறையாகத் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்று, தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக ஆக்கி, சிறப்புற ஒரு சிறந்த பட்ஜெட்டைத் தமிழகத்திற்கு அளித்து, இந்த நாட்டு மக்களை வாழவைத்துக்கொண்டிருக்கின்ற எங்களுடைய இதய தெய்வத்திற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திற்கு எனக்கு மூன்று முறை போட்டியிட வாய்ப்பு கொடுத்து, இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாமன்றத்தில் என்னை இரண்டாவது

கேள்வியைக் கேட்கவைத்த எங்கள் அன்பு தெய்வத்திற்கு மீண்டும் ஒருமுறை என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு, என்னை மூன்றாவது முறையாக வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெற வைத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைக் கூறி, என்னுடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும் நன்றியினைக் கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இன்றைக்கு மானாமதுரை தொகுதியில் இடத்தை ஒதுக்கி அந்தக் கருவூலத்திற்கு ஒரு கட்டடத்தைக் கட்டித் தருகிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றியினைக் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல் தொடர்பாக, கருவூலக் கணக்கு ஆணையர், மானாமதுரை, சார்நிலைக் கருவூல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, புல எண் 244/1-இன் கீழ் இடம் தேர்வு செய்யப்பட்டு, மேற்படி இடத்தில் 0.06.5 ஹெக்டேர் நிலத்தில் சொந்தக் கட்டடம் கட்டிக்கொள்வதற்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் மானாமதுரை சார்நிலைக் கருவூலத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையினைப் பெற்று, புதிய கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைக் கூறிக்கொள்கின்றேன்.